# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, நவெம்பர் மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 86/2002
4743

**2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க. இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தில் 3அ, 3ஆ, 3இ, 3ஈ, 3உ மற்றும் 3ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**2.** 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 3 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ, 3ஈ, 3உ மற்றும் 3ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

"தீர்வு காணப்படாமைச் சான்றிதழின்றி நீதிமன்ற வழக்கெதுவும் தொடரப்படுதலாகாது.

3அ. (1) திறத்தவர்கள், இச்சட்டத்தின் நியதிகளின்படி மத்தியஸ்தத்தின்மூலம் ஏதேனும் பிணக்கில் தீர்வுகாண்பதற்கான ஆற்றுப்படுத்துகைக்கு மத்தியஸ்த உடன்படிக்கையொன்றின்கீழ் உடன்பட்டிருக்கின்றவிடத்து, ஏதேனும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், வர்த்தகப் பிணக்கொன்று தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் எவையும் 3ஊ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்வு காணப்படாமைச் சான்றிதழொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டாலன்றி நீதிமன்றம் ஒன்றில் தொடரப்படலாகாது அல்லது நீதிமன்றம் ஒன்றினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அதனில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பிணக்கொன்றிற்கான திறத்தவர் ஒருவர் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் V ஆம் பாகத்தின்கீழான

ஏதேனும் இடையேற்பாடான பரிகாரம் தொடர்பில் நிவாரணத்தை நாடுகின்றவிடத்து ஏற்புடையனவாதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் கருமம் தொடர்பில் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கானது, அத்தகைய இடையேற்பாடான பரிகாரம் வழங்குவதற்கு அது அவ்வாறு தொடர்புறும் அளவில் மட்டும் நீதிமன்றம் ஒன்றினால் ஏற்றுக் கவனிக்கப்படலாம் என்பதுடன் தீர்மானிக்கவும்படலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக மத்தியஸ்த உடன்படிக்கையொன்று, மத்தியஸ்தத்தினால் தீர்வுகாண்பதற்காக ஒப்பந்தமுறையிலோ அல்லது வேறுவழியிலோ வரைவிலக்கணப்படுத்தப்பட்ட சட்ட உறவுமுறையொன்று தொடர்பாக அவர்களுக்கிடையில் எழக்கூடிய பிணக்குகள் எல்லாவற்றையும் அல்லது ஏதேனும் பிணக்கை எந்த ஒப்பந்தத்தின் மத்தியஸ்த வாசகம் ஒன்றின்மூலம் அல்லது புறம்பான உடன்படிக்கை ஒன்றின்மூலம் திறத்தவர்கள் ஆற்றுப்படுத்துவதற்கு உடன்படுகின்றார்களோ அந்த ஒப்பந்தமொன்றின் மத்தியஸ்த வாசகம் ஒன்றின் படிவத்தில் அல்லது புறம்பான உடன்படிக்கையொன்றின் படிவத்தில் இருக்கலாம்.

*நிலையத்தின் விதிகளின்படி பிணக்கு மத்தியஸ்தம் செய்யப் படுதல்.*

3ஆ. மத்தியஸ்தத்தின்மூலம் ஏதேனும் பிணக்குக்குத் தீர்வுகாண்பதற்காக நிலையத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்று, 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்ச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகளின்படி கையாளப்படுதல் வேண்டும்.

*அந்தரங்கத் தன்மை.*

3இ. மத்தியஸ்த அமர்வுகளின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட அல்லது கலந்துரையாடப்பட்ட ஏதேனும் வேறு விடயங்கள் தொடர்பில் அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் பிணக்கிற்கான திறத்தவர் ஒவ்வொருவரினதும் மற்றும் மத்தியஸ்தர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

*மத்தியஸ்த அமர்வு ஒன்றில் கூற்றை ஆக்குகின்ற ஆளொருவரின் சிறப்புரிமை.*

3ஈ. (1) மத்தியஸ்த அமர்வொன்றில் கூற்றொன்றை அளிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய கூற்றுத் தொடர்பில் சட்ட நீதிமன்றம் ஒன்றின் முன்னர் சான்றை அளிக்கின்ற சாட்சிக்காரர் ஒருவர் அத்தகைய சான்று தொடர்பில் உரித்துடையவராகவுள்ள எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

(2) மத்தியஸ்த அமர்வொன்றில் எவரேனும் ஆளினாற் செய்யப்பட்ட கூற்று எதுவும் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கையில் சான்றில் ஏல்தகவுடையதாயிருத்தலாகாது.

*தீர்வுகாணல் உடன்படிக்கை.*

3உ. பிணக்கொன்றிற்கான திறத்தவர்கள் தீர்வொன்று காண்பதற்கு உடன்படுகின்றவிடத்து, தீர்வுகாணலுக்கான நியதிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) எழுத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) திறத்தவர்களால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) செல்லுபடியான ஒப்பந்தமொன்றைப் போன்று திறத்தவர்களுக்கிடையில் பிணிப்புள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், சட்டத்தில் வலுவுக்கிடப்படற்பாலதாயிருத்தலும் வேண்டும்.

*தீர்வுகாணப் படாமைச் சான்றிதழ்.*

3ஊ. (1) பிணக்கொன்றிற்கான திறத்தவர்கள் தீர்வுகாணலொன்றிற்கு உடன்படாதவிடத்து, அத்தகைய பிணக்குத் தொடர்பில் மத்தியஸ்தச் செயல்முறையை முகாமைசெய்துள்ள மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் அத்தகைய பிணக்கானது மத்தியஸ்தத்தின்மூலம் தீர்வுகாணப்படுவதற்கு சாத்தியமில்லாதிருக்கின்றதெனக் குறிப்பிட்டுச் சான்றொன்றை வழங்குதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் விடயத்திற்கேற்றவாறு, மத்தியஸ்தரினால் அல்லது மத்தியஸ்தர்களினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியின் அல்லது வழக்கு நடவடிக்கையின்போது சான்றாகக் கொண ரப்படலாம் என்பதுடன், அதனை எண்பிப்பதற் காகச் சாட்சிக்காரர் ஒருவராக அத்தகைய ஆளை அழைத்தல் அவசியமாகவிருத்தலுமாகாது.

(3) ஏதேனும் தீர்வுகாணப்படாமைச் சான்றித ழின்மீது எவரேனும் மத்தியஸ்தரின் கையொப்ப மானது அசலானது என்றும், அத்துடன் மத்தியஸ்தர் அவ்வாறு கையொப்பமிடுவதற்கு அதிகாரம் கொண்டிருந்தார் என்றும் நீதிமன்ற மானது ஊகிக்கலாம் :

ஆயினும், ஏதேனும் விடயத்தில் நீதிமன்றம் எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மீதும் அல்லது வேறுவகையிலும் அத்துடன் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், மத்தியஸ்தர் அத்தகைய நீதிமன்றத்திற்கு முன்னர் எவையேனும் வழக்கு நடவடிக்கையில் சான்று அளிப்பதற்கு சமுகமாயிருத்தல் அவசியமானதென அபிப்பிரா யப்படின், அத்தகைய மத்தியஸ்தருக்கு அத்தகைய சான்றிதழில் கையொப்பமிடுதல் தொடர்பில் சான்று அளிக்கும் நோக்கத்திற்காக மட்டும் சாட்சிக் காரர் ஒருவராக அழைப்பு விடுவிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :-

"(ஊ) வியாபாரம் மற்றும் வர்த்தகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச் சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப் பினர் ஒருவர்." அத்துடன்

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் உடன் பின்னராக பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்.

"(7) ஓராம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) இன் கீழ், அதில் குறித்துரைக்கப்படுகின்றதான சம்மேளனம், ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எனச் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் முறையே எந்தச் சம்மேளனத்தின் பிரதிநிதியாக இருக்கின்றாரோ அந்தச் சம்மேளனத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால், சபையின் உறுப்பினரொருவராக பதவிவகியாதொழிதல் வேண்டும்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*